Registered as a Newspaper   பக்கங்கள் 4   விலை ரூபா: 5-00

ஈழநாதம்

THE EELANAATHAM மக்கள் தினசரி Peoples Daily

நாதம் 04   திருவள்ளுவர் ஆண்டு 2025   மாசி 5   (17.02.94)   வியாழக்கிழமை   ஓசை 364

பொது சன நூலகம்
மாநகராட்சி மன்றம்
17-2-1994
யாழ்ப்பாணம்

பொது சன நூலகம்
மாநகராட்சி மன்றம்
17-2-1994
யாழ்ப்பாணம்

சுகாதார பரிசோதகர்களுக்கு குடாநாட்டில் பெரும்பற்றாக்குறை

யாழ் மாவட்டத்தில் சுகாதார பரிசோதகர்கள் பெருமளவில் பற்றாக்குறையாக உள்ளது. 61 சுகாதார பரிசோதகருக்கு பதிலாக 19 பேரே தற்போது பணிபுரிகின்றனர். இவர்களுள் 6 பேர் மீள் நியமனம் பெற்றோர் என்பது குறிப்பிடத்தக்கது. சுகாதார பரிசோதகர்களுக்கு இவ்வாறு பற்றாக்குறை ஏற்படுவதற்கு அரசாங்கத்தின் திட்டமிட்ட செயலே காரணம் என தெரியவருகின்றது. கடந்த ஆண்டு சுகாதார பரிசோதகர் சேவைக்கு 5 தமிழர்களே தெரிவாகினர். இவர்களுக்கான பயிற்சிகளுத்துறையில் வழங்கப்படுகின்றது. அதுவும் தனிச்சிங்களத்திலேயே விரிவுரைகள் நடாத்தப்படுவதாகவும் அதனால் இரண்டுபேர்

(4ஆம் பக்கம் பார்க்க)

காமினியுடன் விஜேதுங்கா விரைவில் இந்தியா விஜயம்

அரசியலமைப்பில் மாற்றம்

சர்வசன வாக்கெடுப்பிற்கு அரசு ஆலோசனை

(கொழும்பு)

சிறிலங்கா அரசியல் அமைப்பில் ஏற்படுத்தப்பட இருக்கும் மாற்றம் தொடர்பாக சர்வசன வாக்கெடுப்பு ஒன்றை நடத்தமுடியுமா? என்பது குறித்து தற்பொழுது சட்ட ஆலோசனை மேற்கொள்ளப்பட்டு வருவதாக தெரியவருகிறது.

ஜனாதிபதி தெரிவு முறைமாற்றம் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்களைத் தெரிவுசெய்ய கடைப்பிடிக்கப்பட போகின்ற புதியமுறை தொடர்பாகவே இச் சர்வசன வாக்கெடுப்பு நடத்த ஆலோசிக்கப்பட்டுவருவதாக தெரியவருகிறது.

கைது செய்யப்படுவோரை விடுவிக்க

வேட்பாளரை கூட்டிவர இராணுவம் வற்புறுத்து

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு பகுதியில் சுற்றிவளைத்து கைது செய்வது கூட தேர்தல் பிரசாரமாகிவிட்டது. சுற்றி வளைப்பில் கைது

அரசியல் மாற்றங்கள் வரலாம்

[கொழும்பு]

சிறிலங்கா ஜனாதிபதி டி. பி. விஜேதுங்கா, காமினி திசாநாயக்காவுடன் நல்லெண்ண விஜயம் ஒன்றை மேற்கொண்டு இந்தியா செல்லவுள்ளார். இது குறித்து ஐக்கிய தேசியக்கட்சி வட்டாரங்களில் அதிருப்தி ஏற்பட்டுள்ளது.

சிறிலங்கா ஜனாதிபதி டி. பி. விஜேதுங்கா ஜனாதிபதியாகப் பதவியேற்றபின்னர் முதற்தடவையாக இந்தியாவிற்கு விஜயம் செய்ய உள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, இவருடன் மீண்டும் ஐக்கிய தேசியக் கட்சியில் இணைந்துகொண்ட காமினி திசாநாயக்காவும் செல்லவுள்ளதாகத் தெரியவருகின்றது.

இந்திய அரசுடன் நெருக்கமான காமினி திசாநாயக்காவை அழைத்துக் கொண்டு டி. பி. விஜேதுங்கா இந்தியா செல்லத் திட்டமிட்டுள்ளது அரசியல் வட்டாரங்களில் பெரும் சந்தேகங்களைத் தோற்றுவித்துள்ளது.

இந்நிலையில், இவரது இந்த விஜயத்தின் பின் அரசியல் நடவடிக்கையில் பல மாற்றங்களைக் கொண்டு வரலாம் என எதிர்க்கட்சி உறுப்பினர் தர்மசிறி சேனநாயக்கா தெரி

(4ஆம் பக்கம் பார்க்க)

காமினி திசாநாயக்காவிற்கு எதிராக ஐ.தே.க. உறுப்பினர் போர்க்கொடி

ஈழநாதம் 4ஆம் ஆண்டு நிறைவு போட்டி முடிவுகள்

ஈழநாதம் நான்காவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடாத்தப்பட்ட போட்டிகளில் பரிசுபெற்ற ஆக்கங்களின் விபரம் வருமாறு:

சிறுகதை

முதற்பரிசு:

“வழித்துணை”
ப. கேதீஸ்வரநாதன்
இல. 120, பலாலி வீதி, திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.

இரண்டாம் பரிசு:

“வெள்ளை - சிவப்பு”
ஆனந்தி
கு. சதாசிவமூர்த்தி
கல்லூரி லேன், சங்கத்தானை,
சாவகச்சேரி.

மூன்றாம் பரிசு:

“ஆயுதம்”
விஜயா
சி. ஸ்ரீகணேசலிங்கம்
வட்டு தென்மேற்கு,
வட்டுக்கோட்டை.

கவிதை

முதற் பரிசு:

செய்து கொண்டு செல்லும் பொதுமக்களை விடுவிக்க வேட்பாளர்களை கூட்டிவருமபடி இராணுவம் கூறிவருகிறது.

மக்கள் வேட்பாளர்களை நோக்கி படையெடுப்பதும் அவர்களும் தங்களுக்கு வாக்களிப்பதாக உறுதியளிக்குமபடி கோருவதும் பின்னர் கைதானவர்கள் அவ் வேட்பாளரின் சிபார்சினால் விடுவிக்கப்படுவதும் தற்போது மட்டக்களப்பில் சாதாரணமாகிவிட்டது.

சில சந்தர்ப்பங்களில் தமது உறவினர்களை விடுவிக்குமாறு மக்கள் ஒன்றிற்கு மேற்பட்ட வேட்பாளர்களிடம் கோர இரண்டு மூன்று வேட்பாளர்களே ஒருவரை விடுவிப்பதற்காக வரும் சந்தர்ப்பங்களும் நடைபெறுகிறது.

இதே சமயம் காணாமற்போனவர்களை கண்டுபிடிக்கவும் சிறையில் உள்ளோரை விடுவிக்கவும் தமக்கு வாக்களிக்கும்படி சில தமிழ்க் குழுக்கள் பொதுமக்களை கோரியுள்ளன.

பிரசாரம் செய்யமறுத்த இளைஞர் சுட்டுக்கொலை

(மட்டக்களப்பு)

உள்ளூராட்சித்தேர்தலுக்கு ஒலிபெருக்கி மூலம் பிரசாரம் செய்ய செல்ல மறுத்த இளைஞர் ஒருவர் ரெலோ தேசத் துரோகிகளால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

கடந்த 10 ஆம் திகதி கரடியனாறு என்னும் இடத்தில் இடம்பெற்ற இச் சம்பவத்தில் வில்லியசிங்கம் கோபிதரன் (வயது 19) என்பவரே இவ்வாறு சுட்டுக் கொல்லப் பட்டவராவார்.

அன்று காலை இதுவரை

(4ஆம் பக்கம் பார்க்க)

வீரச்சாவு

மண்டைதீவுப் பகுதியில் இராணுவத்தினருடன் கடந்த 09-02-1994 அன்று இடம்பெற்ற திடீர் மோதலில் விடுதலைப்புலிகள் போராளி ஒருவர் வீரச்சாவடைந்தார்.

வீரச்சாவடைந்த லெப்டினன்ட் சேரமான் (வீரசிங்கம் கணபதிப்பிள்ளை, இலுப்படிச்சேனை, கன்னங்குடா, மட்டக்களப்பு) எனும் போராளிக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் தமது வீர வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

ஃ ஃ

யாழ். மாவட்டத்தில் கடந்த 14-ம் திகதி திங்கட்கிழமை ஏற்பட்டவிபத்தொன்றில் வீரவேங்கை கலைவிழி (குலசிங்கம் தேவராணி ஆனந்தபுரம் புதுக்குடியிருப்பு) எனும் போராளி வீரச்சாவடைந்தார் இவருக்கு தமிழீழ விடுதலைப்புலிகள் தமது வீர வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கின்றனர்.

லெப். சேரமான்

வீரவேங்கைகலைவிழி

(கொழும்பு)

காமினிதிசாநாயக்காவுக்கு அமைச்சர் பதவி வழங்கப்பட்டால் தாம் அரசாங்கத்திலிருந்தும் ஐக்கிய தேசியக் கட்சியில் இருந்தும் விலகப்போவதாக ஐக்கிய தேசியக் கட்சியின் 38 பாராளுமன்ற உறுப்பினர்கள் சிறிலங்கா ஜனாதிபதி டி. பி. விஜேதுங்காவுக்கும், சிறிலங்கா பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவுக்கும் கடிதம் எழுதியுள்ளனர்.

காமினி திசாநாயக்கா கட்சியில் இணைக்கப்பட்டமை சில அமைப்புகளின் ஊடுருவல் எனவும் இது குறித்து இவ் உறுப்பினர்கள் கவலை கொண்டுள்ளனரெனவும் இக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதில் பல முன்னணி அமைச்சர்கள் உள்ளடங்குவதாகவும் எனவே ஒரு பெரிய பிளவை எதிர்காலத்தில் ஐக்கிய தேசியக் கட்சி எதிர் நோக்கும் என எதிர்பார்க்கப்படுவதாகவும் 'லக்திவ' பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

கிழக்கில் சுமுக நிலையென்றால் இராணுவ நடவடிக்கை ஏன்?

பி. பி. ஸி. செய்தியாளர் விமர்சனம்

(திருமலை)

திருகோணமலை நகர் அருகே சென்றவார இறுதியில் விடுதலைப் புலிகளுக்கு எதிராக எடுக்கப்பட்ட இராணுவ நடவடிக்கை தொடர்வதாக இராணுவ அதிகாரிகள் கூறியதாக பி. பி. ஸி தெரிவித்தது. இந் நடவடிக்கையில் நூற்றுக்கணக்கான படையினர் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

உள்ளூராட்சி தேர்தல் நடக்கும் பகுதியிலிருந்து புலிகளை வெளியேற்ற விரும்புவதாக இராணுவ அதிகாரிகள் குறிப்பிட்டதாக தற்போது திருமலை சென்றுள்ள பி.பி.ஸி கொழும்பு செய்தியாளர் சியாகா நூவோசு தெரிவித்துள்ளார்.

கிழக்கில் வழமை நிலை நிலவுவதாக காட்ட திருமலை உட்பட மூன்று மாவட்டங்களில் தேர்தலை அரசு நடத்துகிறது. ஆனால் திருமலையில் புலிகளின் நிலைகள் மீது படையினர் இப்போது மேற்கொள்ளும் தாக்குதல் புலிகள் எவ்வளவு அருகில் உள்ளனர், நிலைமை இன்னமும் சுமுகமாக இல்லை என்பதையே காட்டுகின்றது பொலிஸ் சோதனை நிலைகள் எங்கும் காணப்படுகிறது என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

புல்மோட்டை, குச்சவெளியை வடமத்தியுடன் இணைக்க முயற்சி

திருகோணமலை மாவட்டம் புல்மோட்டைப் பகுதியையும் குச்சவெளிப் பகுதியையும் வட மத்திய மாகாணத்துடன் இணைக்க அரச தரப்பில் திட்டமிடப்பட்டு வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

பாதுகாப்புக் காரணங்களைக் காட்டி புல்மோட்டைக் கிராமத்தின் பாடசாலை, ஆஸ்பத்திரி நிர்வாகம் தவிர்ந்த ஏனைய நிர்வாகம் அனைத்தும் வட மத்தியமாகாணத்தின் நிர்வாகத்தின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளது. இப்பகுதி விவசாயம், மீன்பிடி வளங்கள் அனைத்தும் அபகரிக்கப்பட்டுள்ளது. திருகோணமலை மாவட்டத்தைப் படிப்படியாக சிங்களமயமாக்கும் திட்டத்தின் ஒரு பகுதி இதுவென கருதப்படுகிறது.

மணற்காட்டில் கடற்படை தாக்குதல் கடலில்குதித்தமீனவரை காணவில்லை

(வடமராட்சி)

வடமராட்சி கிழக்கு மணற்காடு - குடத்தனை கடற்பகுதியில் சிறிலங்கா கடற்படையினர் அகோர பீரங்கித் தாக்குதலை மேற்கொண்டதில் ஒரு மீனவரைக் காணவில்லை இரண்டு படகுகள் சேதமடைந்தன. ஆறு மீனவர்கள் ஒருவாறு கரைக்கு வந்து சேர்ந்தனர்.

இச்சம்பவம் நேற்று அதிகாலை 3.00 மணியளவில் மேற்குறித்த கடற்பகுதியில் வைத்து நடைபெற்றது. இரண்டு படகுகளில் தொழிலுக்குச் சென்று தொழிலில் ஈடுபட்டிருந்த போது கரையை நோக்கி வந்த கடற்படையினர் பீரங்கித்தாக்குதலை

(4ஆம் பக்கம் பார்க்க)

"வாருங்கள் நிலத்தை வளமாக்க...!"

அ. எழில்மாறன்

''வள்ளி மனை'', மீசாலை தெற்கு,

மீசாலை.

இரண்டாம் பரிசு:

"இன்னமும் இங்கே வாழ்பவன் தமிழன்"

சந்திரலிங்கம் கெங்காதரன்

அச்சுவேலி வடக்கு,

அச்சுவேலி.

மூன்றாம் பரிசு:

"நாளை வரலாறு"

வே. இளையகுட்டி

''ஸ்ரீரஞ்சனி''

புத்தூர்.

மாணவருக்கான கட்டுரை

முதற் பரிசு:

செல்வி தேவிகா நவரத்தினம்

இல. 680, காங்கேசன்துறை வீதி,

யாழ்ப்பாணம்.

யாழ். இந்து மகளிர் கல்லூரி

இரண்டாம் பரிசு:

சுப்பிரமணியம் கேதீஸ்வரன்

2ஆம் யூனிற்,

பாலிநகர்,

வவுனிக்குளம்.

பாலிநகர் மகாவித்தியாலயம்

மூன்றாம் பரிசு:

ச. கார்மேகவண்ணன்

பிலாஅடைப்பு,

புலோலி தெற்கு, புலோலி,

உபயகதிர்காமம்.

ஹாட்லிக்கல்லூரி

தனியார் ஆஸ்பத்திரியில்

பணிபுரிந்த இளம்பெண் மரணத்தில் சந்தேகம்

(யாழ்ப்பாணம்)

சுன்னாகத்தில் உள்ள தனியார் டிஸ்பென்சறி ஒன்றில் பணிபுரிந்த இளம் பெண் ஒருவர் அந்த டிஸ்பென்சறியில் நோயாளரை பரிசோதிக்கும் படுக்கையில் இறந்து கிடக்கக் கண்டுபிடிக்கப்பட்டார்.

மேற்படி சம்பவம் நேற்று முன்தினம் நடந்துள்ளது. நுணாவிலைச் சேர்ந்த டாக்டர் மகாலிங்கம் என்பவருடைய இந்த டிஸ்பென்சறியில் இறந்தவரான செல்வி சந்திரா சுந்தரம் (வயது 29

(4ஆம் பக்கம் பார்க்க))

வரி விளம்பரம்

தேவை

வேலணை ப.நோ.கூ. சங்கத்திற்கு இரும்பு அலுமாரி தேவைப்படுகிறது. இதனை விற்க விரும்புவோர் கோணாந்தோட்ட வீதியில் அமைந்திருக்கும் வேலணை ப.நோ.கூ. சங்க தலைமை அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளவும்.

(சி-8642)

விற்பனைக்கு

ஹோட்டலுக்குத் தேவையான தளபாடங்கள், கண்ணாடி சோக்கேஸ், கண்ணாடி றாக்கை, இரும்புக் குழாய் மேசைகள், இரும்புக் குழாய் குசன் கதிரைகள், எம்மிடம் உண்டு. தொடர்பு: இம்மானுவல், றெஜிபேனாட், பீச்றோட், 1-ம் ஒழுங்கை, 10 A, ஈச்சமோட்டை, யாழ்ப்பாணம்.

(7544)

வெளிவந்துவிட்டது

சமூகக்கல்வி துரித மீட்டலுக்கான வினா விடை ஆண்டு 9 ஆக்கம்:- க. சந்திரசேகரம் ஏகவிநியோகஸ்தர்கள்:-(1) சோதி புத்தகசாலை கச்சாய் வீதி, சாவகச்சேரி, (2) ஸ்ரீசுப்பிரமணிய புத்தகசாலை, 235, காங்கேசன்துறைச்சாலை, யாழ்ப்பாணம்.

(7528)

தேவை

வீடியோடெக், கலர் தொலைக்காட்சிப் பெட்டிகள், கசற்செற் வகைகள், மைக் மற்றும் எலத்திரனியல் பொருட்கள் நல்ல விலை கொடுத்து வாங்கப்படும். தொடர்பு: மின்வளம் இல, 81 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

(சி-8638)

கற்பிட்டியில் ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டன

(கொழும்பு)

செஞ்சிலுவை செயற்பாடுகள் மன்னாரில் மந்தகதி

(மன்னார்)

செஞ்சிலுவைச் சங்கத்தின் செயற்பாடுகள் மன்னார் மாவட்டத்தில் தொடர்ந்தும் மந்த நிலையிலேயே இருப்பதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

செஞ்சிலுவைச் சங்கக் கூட்டத்திற்காக கொழும்புக்குச் சென்ற மன்னார் மாவட்ட செஞ்சிலுவைச் சங்க உறுப்பினர் இருவர் படையினரால் சென்ற ஆகஸ்டில் கைதுசெய்யப்பட்டது தெரிந்ததே. இவர்கள்மீது இராணுவம் குற்றப்பத்திரிகை எதையும் இன்னமும் தாக்கல் செய்யவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

இவர்களை விடுதலை செய்யும்படி அல்லது நீதிமன்றத்தின் முன் நிறுத்துமாறு சமூக சேவை அமைப்புகள் எதுவும் அரசிடம் இதுவரை கோரிக்கை விடவில்லை எனவும் கூறப்படுகிறது. அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையமும் இவர்கள் தொடர்பாக அரசாங்கத்திடம் வேண்டுகோள் விடவில்லை எனவும் கவலை தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி)

மூக்குகண்ணாடி எடுத்துவர கடற்படை தடை விதிப்பு

யாழ்ப்பாணத்திற்கு மூக்குக் கண்ணாடிகளை எடுத்து வர திருகோணமலையில் கடற்படையினர் தடை விதித்துள்ளனர். அரச சார்பற்ற நிறுவனமான றெட்பானா இங்குள்ள பாடசாலை மாணவர்களுக்கு வழங்குவதற்கென 125 மூக்குக்கண்ணாடிகளை கொழும்பில் இருந்து எடுத்து வந்திருந்தது.

திருகோணமலை துறைமுகத்தில் கடற்படையினரின் சோதனையின்போது கண்ணாடியை எடுத்துச் செல்ல அனுமதிக்க முடியாதெனக் கடற்படையினர் தெரிவித்து அதனை தடுத்துள்ளனர்.

யாழ். றெட்பானா பிரதிநிதி சத்தியோத சர்மா பார்வை குறைந்த மாணவர்க்ளுக்கு வழங்குவதற்கென எடுத்துக் கூறியும் படையினர் அனுமதி மறுத்துள்ளனர்.

அபராதம் விதிக்கப்பட்டது

கச்சாய் கொடிகாமம் பகுதியில் சுகாதார வைத்திய அதிகாரியின் அனுமதியின்றி மாடு ஒன்றினை தமது இல்லத்தின் சுப நிகழ்ச்சி ஒன்றிற்காக வெட்டிய ஒரு நபர் காவல்துறையினரால் சாவகச்சேரி நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டார். இவருக்கு நீதிமன்றம் இரண்டாயிரம் ரூபா குற்றம் கட்டும்படி தீர்ப்பளித்ததுடன் பிணையில் விடுதலை செய்தது. (86)

JAFFNA COLLEGE INSTITUTE OF TECHNOLOGY

VADDUKODDAI

நேர்முகப் பரீட்சை

எமது விளம்பரத்திற்கு அமைய விண்ணப்பித்தவர்களிற்கான நேர்முகப் பரீட்சை இம் மாதம் 17ஆம், 18ஆம் திகதிகளில் வட்டுக்கோட்டையில் எமது வளாகத்தில் நடைபெறும். இதற்கானகடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளன. விண்ணப்பதாரர்கள் இந் நேர்முகப் பரீட்சைக்கு சான்றிதழ்களுடன் சமுகமளிக்கவும்.

காணவில்லை

இடைக்காட்டை பிறப்பிடமாகவும் முத்தையன்கட்டை வசிப்பிடமாகவும் கொண்ட வினாசித்தம்பி ஆள்வாப்பிள்ளை (70வயது) என்பவர் 18-1-94இல் இருந்து காணவில்லை. இவர் கடைசியாக சைக்கிள் மூலம் முத்தையன்கட்டிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி புறப்பட்டவர். இவர் பற்றிய தகவல் தெரிந்தவர்கள் கீழ்க்காணும் விலாசத்தில் தொடர்புகொள்ளவும் தகவல் தருபவருக்கு தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

வி. கணபதிப்பிள்ளை

C/o V. வினாயகமூர்த்தி

நீர்வேலி வடக்கு,

நீர்வேலி.

(சி-8647)

முக்கிய அறிவித்தல்

வடபிராந்திய வர்த்தகர் சங்கங்களின் சமாஜம்

போலி வியாபாரக் குறிகள்

போலி வியாபாரக் குறிகளைக் கொண்ட குளுக்கோஸ், அப்பச்சோடா, நீலம் போன்ற போலி வியாபாரக் குறிகளை அல்லது கலப்படப் பொருட்களையோ வர்த்தக நிலையங்களில் விற்பனை செய்வதனூடாக ஏற்படும் சிரமங்களைத் தவிர்த்து போலி வியாபாரக் குறிகளுக்கு துணைபோகாது தவிர்த்துக்கொள்ளும் வண்ணம் ஒவ்வொரு வர்த்தக உறுப்பினர்களையும் கேட்டுக்கொள்கிறோம்.

நன்றி

த. கோவிந்தசாமி

தலைவர்

(சி-8648)

இலங்கை இளங்கலைஞர் மன்றத்தின்

14-வது இசைவிழா

6-ம் நாள் 17-2-94

வியாழக்கிழமை

சோபனாஸ்-மதுரா பட்டுமகால் நிறுவனங்களின் ஆதரவில்

இந்து சமயப் பேரவை, யாழ்ப்பாணம்

(இந்துசமய அமைப்புக்கள், இந்துக்கோவில்தர்மகர்த்தா சபைகள், இந்து சமய அபிமானிகளின் கூட்டமைப்பு)

வருடாந்த கூட்ட அறிவித்தல்

காலம்: 6 3-94 ஞாயிறு காலை 10-00 மணி

இடம்: நல்லை ஆதீனம், நல்லூர்.

சாதாரண அங்கத்தவர்கள் 1993-ம் ஆண்டுக்கான சந்தா ரூபா 100/- அல்லது ரூபா 500/- செலுத்தி உறுப்புரிமையை புதுப்பித்துக் கொள்ளுமாறு அல்லது ஆயுட்கால உறுப்பினராகும் படியும் புதிதாகச் சேர விரும்புவோர் 28-02-94-ம் திகதிக்கு முன்னர் பொருளாளருடன் தொடர்பு கொள்ளுமாறும் கேட்டுக் கொள்கின்றோம்.

பிரேரணைகள் அனுப்ப விரும்புவோர் 28-02-94-ந் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்குமாறும் கேட்டுக் கொள்கின்றோம்.

நா. முத்தையா
தலைவர்.

சி. சக்திகிரீவன்
கௌரவ செயலாளர்.

நல்லை ஆதீனம்,
நல்லூர், யாழ்ப்பாணம்.
14-02-94.

(சி-8645)

நினைவு கூருகின்றோம்.

1994-02-17

1987 ஆம் ஆண்டு இதே தினத்தில் அம்பாறை-சாவாறுப் பகுதியில் எதிர்பாராதவிதமாக ஏற்பட்ட வெடி விபத்தில் எமைப்பிரிந்த,

சுமன் (துரைராசா ஜெயக்குமார் - காரைதீவு - அம்பாறை)

சுதர்சன் (ஐயம்பெருமாள் கருணாகரன் - பனங்காடு அக்கரைப்பற்று - அம்பாறை)

1988 ஆம் ஆண்டு திருமலை-மூதூர், அலுஒலுவைப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் வீரச்சாவெய்திய,

❁ **தர்மலிங்கம் தங்கத்துரை** (ஈச்சிலம்பத்தை, மூதூர் - திருமலை)

1989 ஆம் ஆண்டு அம்பாறை - நிந்தாவூர்ப்பகுதியில் தேசவிரோதக் குழுவினரால் கொலை செய்யப்பட்ட

நசீர் (சம்சுதீன் நசீர் - ஒலுவில் - அம்பாறை)

கற்பிட்டிபகுதியில்வீடொன்றில் மறைத்து வைக்கப்பட்ட வெடி குண்டுகள், டயமைற் நிரப்புவதற்கு பாவிக்கப்படும் ஜெலினைட் 7160 நேற்று பொலிஸாரினால் கைப்பற்றப் பட்டது.

புத்தளம்பொலிசார் மேற் கொண்ட திடீர் சோதனையின் போது மேற்படி விடயம் கண்டு பிடிக்கப்பட்டது: இந்தியாவில் இருந்து இப் பொருட்களை கொண்டுவருவதற்கு பயன்படுத்திய 40 வலு குதிரைச் சக்தியுடைய இஞ்சினும், படகும் இதில் இருந்த வேறு பொருட்களும் கைப்பற்றப்பட்டுள்ளன.

பார்மசி வகுப்புகள் ஆரம்பமாகவுள்ளன

யாழ் ஆங்கில மருந்து வர்த்தகர் சங்கம் நடாத்தும் இலவச பார்மசி வகுப்புக்கள். யாழ் இந்துக் கல்லூரியில் நாளை மறுதினம் சனிக்கிழமை பிற்பகல் ஒரு மணி முதல் ஆரம்பமாகவுள்ளன.

சங்கத்தினால் நடாத்தப் பட்ட நேர்முகப் பரீட்சையில் தெரிவானவர்கள் சங்கப் பணிமனையுடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

பொன் விழா

(கொழும்புத்துறை)

கோப்பாய் தெற்கு சூரியோதய சனசமூக நிலையத்தின் விசேட பொதுக்கூட்டம் நிலையத் தலைவர் ''சமூக இரத்தினம்'' திரு. எம்.கே. இளையப்பு ஜே. பி. தலைமையில் அண்மையில் நடைபெற்றது.

நீண்ட கால வரலாற்றுப் பெருமைக்குரிய இச்சூரியோதய சனசமூக நிலையத்தின் 50 ஆவது வருட பொன் விழாவை எதிர்வரும் வைகாசி மாதத்தில் சிறப்பான வகையில் நடாத்துவதாகவும் முடிவு செய்யப்பட்டது. (24)

ஆதாரம் காட்டி பெறவும்

(யாழ்ப்பாணம்)

நீரிழிவு நோய்க்கு பாவிக்கும் ஒரு தொகுதி மருந்து வில்லை அட்டை கண்டெடுக்கப்பட்டு எமது காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது: உரியவர் ஆதாரம் காட்டி பெற்றுக்கொள்ளவும்

விண்ணப்பிக்கத் தவறியவர்கள் விண்ணப்பப் பத்திரத்துடன் 17ஆம், 18ஆம் திகதிகளில் நேர்முகப் பரீட்சைக்குத் தோன்ற வசதி செய்யப்பட்டுள்ளது.

(சி-8650) -இயக்குநர்

2-ம் ஆண்டுநினைவலைகள்

17-2 92 அன்று வளலாயில் நடந்த நேரடிச்சமரில் வீரச்சாவைத்தழுவிக் கொண்ட

லெப்டினனட் சுரேஸ்/தில்லை

(அருளானந்தசாமி ஜெயசீலன்)

(இன்பருட்டி பருத்தித்துறை)

பிறப்பு:
28-2-1972

வீரச்சாவு:
17-2-1992

அண்ணனின் பாதையில் அணிவகுத்து
நின்ற வேங்கை இவன் சிங்களம்
கலங்கிட செங்கள மாடிய மாவீரன்
சுரேஸ் நின்புகழ் வாழ்க - வளர்க தமிழ்

உங்கள் பிரிவால் துயருறும்
- குடும்பத்தவர்

(7534)

4.00 - 5.00 மங்கள இசை

எம். எஸ். சண்முகநாதன்)
எஸ். சுப்பிரமணியம்) நாதஸ்வரம்
பி. சின்னப்பழநி)
கே. சேனாதிராஜா) தவில்

5.00 - 5.15 மிருதங்க இசை

பி. ரதிரூபன் எம். சஜன்
எஸ். சிவசிவா எஸ். சுதர்சமோகன்

5.15 - 5.35 பாட்டு

ஆர். பிரியதர்ஷினி) பாட்டு
எம். சாருமதி)
சுகிர்தா - வயலின்
ஏ. செல்வரத்தினம் - மிருதங்கம்

5.35 - 5.55 புல்லாங்குழலிசை

பி. பத்மராஜா)
வீ. சந்திரசேகரம்)
ரீ. கவிராஜ்) புல்லாங்குழல்
ஏ கனகரததினம்)
ம. கிருஷ்ணவேணி - வயலின்
கே. மயூரன் - மிருதங்கம்

5.55 - 6.15 வயலினிசை

பி. பத்மலோசனி)
ஆர். கோதர்ஜனா)
கே. சாருமதி) வயலின்
ரீ. சுதாஜினி)
எஸ். மிருணாளினி)
எஸ். துரைராஜா - மிருதங்கம்

6.15 - 7.00 பாட்டு

நந்தினி ராமலிங்கம் - பாட்டு
ஆர். எஸ். கேசவமூர்த்தி - வயலின்
கே. கண்ணதாஸன் - மிருதங்கம்

7.00 - 7.30 மங்கள விளக்கேற்றல்

திரு. ரீ. கோவிந்தசாமி (லீலா ஸ்ரோர்ஸ்)
திரு. இ. தேவராஜ் (சோபனாஸ் புடவை)
திரு. க. சுதாகர்
தலைவர்:- கலாநிதி ஏ. வி. மணிவாசகர்
(சிரேஷ்ட விரிவுரையாளர், பொருளியல் துறை யாழ். பல்கலைக்கழகம்)
பிரதம விருந்தினர்:- திருமதி க. சிவசிதம்பரம்
(பிரதேச செயலர், நல்லூர்)
சிறப்பு விருந்தினர்:- திரு இ- இளங்கோவன்
(உதவிப் பிரதேசச்செயலர் நல்லூர்)

7.30 - 8.30 வயலினிசை

பாக்கியலட்சுமி நடராஜா - வயலின்
எஸ். மகேந்திரன் - மிருதங்கம்
எஸ். துரைராஜா - கஞ்சிரா

8 30 - 9.30 பரதநாட்டியம்

''நாட்டிய கலாலயம்'' மாணவிகள்
தயாரிப்பு: பாரதி சிவயோகநாதன்

வாழ்த்துவோர்:
அருண் களஞ்சியம்
திருநெல்வேலி சந்தை, திருநெல்வேலி.
(சி | 8646)

முல்லைத்தீவில் தேசவிரோதக் குழுவினரால் சுட்டுக் கொல்லப்பட்ட மாமுனையைச் சேர்ந்த தமிழினைஞன்

1991 ஆம் ஆண்டு மன்னார் - கொண்டைச்சிப் பகுதியிற் சிறிலங்கா இராணுவத்தினருடனான நேரடிச் சமரில் வீரச்சாவெய்திய,

மேஜர் ராதாரவி (சிவகுரு சிவபாலன்-முழங்காவில் -மன்னார்)

லெப். ஏகாம்பரம் (மாரிமுத்து மகாலிங்கம் -முருங்கன் - மன்னார்)

ஞானமுத்து (ஜோன்பற்றிக் அந்தோனி - பள்ளிமுனை - மன்னார்)

கப்டன் துரைமணி (பசுபதி தவராசா-2ம்பண்ணை, செட்டிக்குளம் - வவுனியா)

மேஜர் சூரி (நகுலேஸ்வரன் - வட்டக்கச்சி - கிளிநொச்சி)

1992 ஆம் ஆண்டு சுகவீனம் காரணமாக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்தபோது எமைப்பிரிந்த,

ஜானகி (புவனேஸ்வரி எட்வின் - உதயநகர் - கிளிநொச்சி)

வவுனியா- விளக்குவைத்தகுளம் பகுதியிற் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட விமானத் தாக்குதலில் வீரச்சாவெய்திய,

மங்களா (தேவிகா அப்புத்துரை - தம்பிராய், பூநகரி – கிளி)

கலாநிதி (பாலமனோகரி குணசேகரம்-ஆழியவளை தாளையடி - யாழ்)

யாழ் - அச்சுவேலி, வளலாய்ப் பகுதியில் முன்னேற முயன்ற சிறிலங்கா இராணுவத்தினருடன் ஏற்பட்ட நேரடிச் சமரில் வீரச்சாவெய்திய,

லெப். தில்லை|சுரேஸ் (அருளானந்தம் ஜெயசீலன் - இன்பருட்டி - பருத்தித்துறை - யாழ்)

கிளி - ஆனையிறவு சிறிலங்கா இராணுவ முகாம் தகர்ப்புமுயற்சியாக மேற்கொள்ளப்பட்ட ஆ. க. வெ. நடவடிக்கையின் போது விழுப்புண் அடைந்திருந்து யாழ் மருத்துவமனையில் வீரச்சாவெய்திய,

2-ம் லெப், தங்கப்பன் /ஜெரோம் (அப்புக்குட்டி ரவி - தாமோதரம்பிள்ளை வீதி, சாவகச்சேரி)

1993 ஆம் ஆண்டு யாழ் மாவட்டத்தில் தவறுதலாக ஏற்பட்ட வெடிவிபத்தில் எமைப்பிரிந்த,

அன்புதாஸ் (செபமாலை ஆனந்தன் - மாமுனை செம்பியன் பற்று - வடமராட்சி கிழக்கு)

ஆகியோரை இந்நாளில்

நினைவு கூருகின்றோம்.

✲ இக்குறியிடப்பட்டுள்ள மாவீரர்கள் ஈரோஸ் அமைப்பு இயங்கிய காலத்தில் அதனுடன் இணைந்து செயற்பட்டவராவார்.

தமிழீழ விடுதலைப் புலிகள்.

(சி-8644)

சிந்தனைக்கு

பிறர் இன்பத்திற்காக தங்கள் வாழ்க்கையை அர்ப்பணம் செய்பவர்களே மேற்பட்ட மக்கள். அது மட்டுமல்ல இன்பத்தை பெரிதும் எய்தியோரும் அவர்களே.

- வஸ்ஸிலி, ஸீதோம் லின்ஸ்கி

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 17-02-1994
தொலைபேசி
ஆசிரியபீடம் 025 - 2839 நிர்வாக பீடம் 2023
தபால் பெட்டி எண் 05

ஜனநாயகம் போடும் பொம்மலாட்டம்

சிறிலங்கா அரசின் அரசியலமைப்பும் கல்விக்கொள்கையும் இன்று அரசியல்வாதிகளின் விளையாட்டுப் பொருட்கள்போல் ஆகிவிட்டன. ஒரு பொம்மையின் கையைத் திருகுவது போலவும், கழுத்தை முறிப்பது போலவும் விரும்பியவாறு விரும்பிய நேரத்தில் அரசியல் அமைப்பையும், கல்விக் கொள்கையையும் அவர்கள் மாற்ற முற்படுகின்றனர் / மாற்றுகின்றனர்.

இதை வெளிப்படுத்துமாப் போன்றே இன்று அரசியலமைப்பு மாற்றம் குறித்து சிறிலங்கா ஜனாதிபதி டி. பி. விஜேதுங்கா பேசிவருவது உள்ளது. அநுராதபுரத்தில் இருந்து கட்டுகஸ்தோட்ட வரை கடந்த வாரத்தில் இடம்பெற்ற பொதுக் கூட்டங்கள் யாவற்றிலும் அரசியலமைப்பு மாற்றம் பற்றி டி. பி. விஜேதுங்கா பேசியுள்ளார்.

இதில் அவரின் பிரதான அறிவிப்பாக முதலில் இருந்தது ஜனாதிபதிதெரிவு முறையைமாற்றுவதாகும். தற்பொழுது இருக்கும் மக்களால் தெரிவு செய்யப்படும் முறையை மாற்றி, பாராளுமன்றத்தால் தெரிவு செய்யப்படும் முறையைக் கொண்டு வருவதாகும். ஆனால், தற்பொழுது மேலும் ஒன்றையும் சேர்த்துக் கொண்டுள்ளார். பாராளுமன்ற உறுப்பினர் தெரிவு முறையை

கெற்பலியில் தொற்று நோய்களால் ஒரேமாதத்தில் அறுவர் பலி

ஐந்துபேர் சிறுவர்கள்

(யாழ்ப்பாணம்)

தொற்று நோய்களின் கோர தாண்டவம் கெற்பலி பண்டிதர் குடியிருப்பில் ஒரு மாதத்திற்குள் ஐந்து சிறார்களின் உயிர்களைப் பறித்துள்ளது. செப்ரிசீமியாவினால் வேலணையைச் சேர்ந்த தயாபரன் தர்ஜினி (வயது-2) காய்ச்சலினால் வேலணையைச் சேர்ந்த வாமதேவன் அருள் (வயது-3), மார்க்கண்டு தாசன் சாலினி (வயது-4), யோகபாலு தீபுகா (வயது-3) ஆகியோர் மரணமடைந்துள்ளார்கள் புங்குடுதீவைச் சேர்ந்த மணிவண்ணன் கிருஷ்ணபிரியா (வயது-8) என்ற சிறுமி வயிற்றுவலி, காய்ச்சலினால் 12ஆம் திகதி சனிக்கிழமை இரவு உயிரிழந்தார்.

அத்துடன்குடியிருப்பில்பெரும்பாலான சிறார்கள் மற்றும் வயதுவந்தோர் என அனைத்து தரப்பினரும் காய்ச்சலினால் பீடிக்கப்பட்டே உள்ளனர் மேற்படி சிறார்களின் உயிரிழப்புக்களை அடுத்து பெற்றோர் மத்தியில் பீதி நிலவுகின்றது.

புங்குடுதீவைச் சேர்ந்த ஆ. நாகம்மா (வயது- 80) என்ற மூதாட்டியும் செப்ரிசீமியா நோயினால் அண்மையில் உயிரிழந்துள்ளார்.

இதேவேளை இடநெருக்கடியை நீக்கும் பொருட்டு நெருக்கமாக இருந்த குடிசைகள் அகற்றப்பட்டு குடியிருப்பின் தென் புறத்தில் இரண்டு பரப்புக் காணியுடன் கூடியதாக ஒவ்வொரு வீடுகள் அமைக்கப்பட்டு வருகின்றன. தொற்றுநோய்கள் தீவிரமாகப் பரவுவதற்கும் அதனால் உயிரிழப்புக்கள் அதிகமாக ஏற்படுவதற்கும் இடநெருக்கடியும் ஒரு காரணம் என குடியிருப்பு மக்களிடையே பரவலாக நம்பப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (22)(86)

தேசிய பாடசாலைகளில் ஆசிரிய வெற்றிடங்கள்

(கொழும்பு)

தேசிய பாடசாலைகளில் தற்பொழுது நிலவுகின்ற ஆசிரியர் வெற்றிடங்கள் பற்றிய விபரங்களை அரசாங்க சேவை ஆணைக்குழுவின் கல்விச் சேவைச் சபை வலயக் கல்விப் பணிப்பாளர்களுக்கு அறிவித்துள்ளது. அறிவித்தலின்படி வேம்படி மகளிர் கல்லூரி மற்றும் யாழ் இந்துக் கல்லூரியில் ஆசிரியர் வெற்றிடங்கள் உள்ளன. தேசிய பாடசாலையாகத் தரமுயர்த்தப்பட்ட சாவகச்சேரி இந்துக் கல்லூரி குறித்து இந்த அறிவித்தலில் எதுவும் தெரிவிக்கப்படவில்லை.

வேம்படி மகளிர் கல்லூரியில் ஆரம்ப நெறி ஆசிரியர் ஒருவருக்கும், விஞ்ஞான ஆசிரியர் 5 பேருக்கும், கணித ஆசிரியர் ஒருவருக்கும், சங்கீத ஆசிரியர் ஒருவருக்கும் மற்றும் தமிழ்மொழி ஆசிரியர் ஒருவருக்கும் வெற்றிடங்கள் இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதேவேளை, யாழ் இந்துக் கல்லூரியில் 2 கலைப் பட்டதாரிகளுக்கும், ஒரு வர்த்தகப் பட்டதாரிக்கும் மற்றும் விஞ்ஞானம், கணிதம், அழகியற்கல்வி, மரவேலை / உலோக வேலை, உடற்கல்வி ஆகிய கற்கை நெறிகளுக்குத் தலா ஒவ்வொரு ஆசிரியர் தேவை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முன்னர் உரிய பாடசாலைகளுக்கு விண்ணப்பங்களைச் சமர்ப்பித்தவர்கள் மீளவும் விண்ணப்பிக்க வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது விண்ணப்ப இறுதித் திகதி 1993-11-15 என அறிவிக்கப்பட்டிருந்தும் சுற்றுநிருபம் காலதாமதமாகி இம்மாதம் முதல் வாரத்தில்தான் வடபகுதிக்கு வந்துசேர்ந்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

பொலிஸ் நிலையமா அல்லது பற் சிகிச்சை நிலையமா?

(கொழும்பு)

பதிலளித்த ராஜாங்க அமைச்

உதைபந்தாட்டம்

வடபிராந்திய சுருட்டுத் தொழிலாளர் சங்கம் நடத்தும் தையல் மற்றும் தட்டச்சுப் பயிற்சி மாணவர் ஒன்றிய வளர்ச்சி நிதிக்காக எதிர்வரும் சனி, ஞாயிறு இரு தினங்களிலும் உதைபந்தாட்ட சுற்றுப்போட்டி ஒன்று நடத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இப்போட்டிகளில் யாழ்ப்பாண மாவட்டத்தில் முன்னணியிலுள்ள பன்னிரண்டு விளையாட்டுக் கழகங்கள் பங்கேற்கவுள்ளன.

கிரிக்கட்

கிராம சேவையாளருக்கு புதிய சம்பளத்திட்டம்

(கொழும்பு)

கிராம சேவையாளர்களை மூன்று தரங்களாகப் பிரித்து அவர்களின் சம்பளம் மற்றும் வேறு வசதிகளையும் வகைப்படுத்த புதிய திட்டமொன்று உருவாக்கப்பட்டு வருவதாக உள்நாட்டலுவல்கள் அமைச்சர் ஜோன் அமரதுங்க தெரிவித்தார்.

விசேட தரத்திலுள்ள கிராமசேவகர்களுக்கு ரூபா 3760 முதல் 4760ரூபாவரையும் முதலாம் தரத்திலுள்ளவர்களுக்கு 2910 ரூபா முதல் 3755 ரூபா வரையும், இரண்டாம் தரத்திலுள்ளவர்களுக்கு 2285 ரூபா முதல் 3000 ரூபாவரையும் சம்பளம் நிர்ணயிக்கப்படவுள்ளதாகவும் சுங்கத்தீர்வையற்றமோட்டார் சைக்கிள் கொள்வனவு செய்யஅனுமதி வழங்கப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

ப. நோ. கூ. சங்கங்களுக்கு கடனடிப்படையில் பொருள்

(நமது நிருபர்)

யாழ்.செயலகத்தில் நேற்று நடைபெற்ற பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் கூட்டத்தின் முடிவில் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு அவ்வப் பகுதி உதவி அரசாங்க அதிபர்களின் உத்தரவாதத்தின் பேரில் இருவார கடன் அடிப்படையில் உணவுப் பொருள்களை வழங்குவதற்கு அரச அதிபர் இணங்கியுள்ளதாக பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை இக்கடன்கள் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் யாழ். செயலக புனர்வாழ்வுப் பகுதியினருக்கு செலுத்த வேண்டிய தொகையை செலுத்திய பின்பே வழங்கப்படுமெனவும் உயர்கல்வி அமைச்சினால் வழங்கப்பட்ட மாணவர் மதிய உணவு முத்திரைக்கு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் வழங்கிய உணவுப் பொருள்களுக்கு செயலகம் வழங்க வேண்டிய பணம் நீங்கலாக செயலக புனர்வாழ்வுப் பகுதிக்கு செலுத்த வேண்டிய பணத்தை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் செலுத்திய பின்னர் செலுத்திய பணத்தின் தொகையளவு கடனே வழங்கப்படுமெனவும் அக்கடனை இருவாரத்துக்குள் திருப்பிச் செலுத்த வேண்டுமெனவும் தீர்மானிக்கப்பட்டதாக தெரியவருகின்றது (சி, பா)

அரசாங்க சிற்றூழியர் சுகவீனவிடுமுறை அதிகரிப்பு

(கொழும்பு)

அரசாங்க துறையைச் சேர்ந்த சிற்றூழியர்களின் சுகவீன விடுமுறை 14 நாட்களில் இருந்து 24 நாட்களாக அதிகரிக்கப்பட்டுள்ளன.

பொது நிர்வாக உள்ளூராட்சி அமைச்சர் பெஸ்டஸ் பெரேரா செய்த சிபாரிசை

ழியர்களின் சுகவீன லீவை 24ஆக உயர்த்த முடிவுசெய்துள்ளது.

அரசாங்கத்துறையில் உள்ள ஏனையதர ஊழியர்களுக்கும் சிற்றூழியர்களுக்குமிடையில் ''சுகவீன விடுமுறை ஒதுக்கீட்டில் இருந்து வேறுபாட்டை

டுள்ளார். பாராளுமன்ற உறுப்பினர் தெரிவு முறையை மாற்றுவதாகும். இதன்பிரகாரம், அரைப்பங்கு உறுப்பினர்களைத் தெரிவுமுறை மூலமும், அரைப்பங்கு உறுப்பினர்களை நியமனத்தின் மூலமும் செய்வதென்பதே அவரது நோக்கமாகும்.

டி. பி. விஜேதுங்கா முற்றும் துறந்த போதிசத்துவரல்ல என்பது எல்லோருக்கும் தெரிந்ததொன்றுதான். ஆகையினால் அதிர்ஷ்டவசமாக கிடைத்தது என்றாலும், சொற்ப காலத்திற்குள் ஜனாதிபதிப் பதவியின் சுகத்தை அவர் துறக்க விரும்பாமல் இருப்பது மனித இயற்கை தான் டி. பி. விஜேதுங்கா ஜனாதிபதியாகப் பதவி ஏற்றபோது அபிலாசைகள் அற்ற இம் மனிதன் என்றும் சொற்ப காலத்திற்கு ஓர் இடைக் கால ஜனாதிபதியாகவே இருப்பார் எனவும்சிலர் தெரிவித்தமை, மனிதனின் அதிகார சுகத்தை மறந்த கணிப்பீடாகும்'

ஆதலினால், டி. பி. விஜேதுங்கா பதவியில் தொடர்ந்து இருக்க எண்ணுவது | முயற்சிப்பது ஒன்றும் புதுமையானது அல்ல, ஆனால், டி. பி. விஜேதுங்கா தனது அதிகாரத்தைக் காப்பாற்றிக் கொள்வதற்கென எதையும் செய்யத் தயாராக இருக்கின்றார் என்பது, அதற்கு அவர் பல சதுரங்கங்களை ஆடத் தயாராக இருப்பார் என்பதுமே பலருக்கு - ஐ. தே. க வில் உள்ளவர்களுக்குக் கூட - ஆச்சரியம் கொடுக்கும் ஒன்றாக உள்ளது.

ஆனால், டி. பி. விஜேதுங்கா இலங்கையில் இனப் பிரச்சினை என்பதே இல்லை, பயங்கரவாதப் பிரச்சினை மட்டுமே உள்ளது என்பதில் இருந்து இறுதியாக அவர் அறிவித்துள்ள பாராளுமன்ற உறுப்பினர்களை நியமிப்பது தொடர்பான அறிவுறுத்தல்கள்வரை அவர் தொடர்ந்தும் ஆட்சியில் நீடிப்பதற்கான நடவடிக்கைகள் என்றே கொள்ள வேண்டும்.

இவற்றைத் தவிர, இடைநிலைக் கல்வியில் கொண்டுவர முற்பட்டிருக்கும் மாற்றங்களில் இருந்து அரசாங்கம் அறிவிக்கும் சம்பள உயர்வுகள், சலுகைகள் வரையும் இதே நோக்கம் கொண்டவையே ஆகும். இந்நடவடிக்கைகள் பௌத்த பேரினவாதத் தன்மையை உறுதிப்படுத்துவதற்கானதும், இவ் அரசாங்கத்தால் நன்மை அனுபவிக்கலாம் என்ற நிலையை உருவாக்குவதுமேயாகும்.

ஆனால், சிறிலங்கா அரசியலைப் பொறுத்து இவை ஒன்றும் இவரது தனியுடமை அல்ல, கடந்த காலத்தில் ஐக்கிய தேசியக் கட்சியும் சரி, சிறிலங்கா சுதந்திரக் கட்சியும் சரி, இவ்வாறான காரியங்களில் ஈடுபட்டவைதான். ஆனால், ஒட்டுமொத்தமாகப் பார்த்தால், சிறுபான்மையினரைப் பலவீனப்படுத்தும் நோக்கில் ஆரம்பிக்கப்பட்ட இந்நடவடிக்கைகள் இன்று ஆட்சியாளரை- குறிப்பாக ஜனாதிபதியைப் பலப்படுத்தும் ஒன்றாக மாறியுள்ளது என்பதே வெளிப்படை.

இதற்கு மூலகாரணம் ஜே. ஆர். ஜெயவர்தனா என்று திட்டவட்டமாகத் துணிந்து கூறலாம். ஆனால், ஜே. ஆர். ஜெயவர்தனாவும், அதன் பின்னர் வந்த ஆர். பிரேமதாசாவும் தம்மீது நம்பிக்கை கொண்டவர்கள். ஆகையால், அவர்கள் அரசியலமைப்பின் பின்பலத்துடன் சிங்கள மக்களைச் சந்திக்கத் தயங்கவில்லை. ஆனால், டி. பியோ தன்னம்பிக்கை அற்றவர். ஆகையினால். அரசியலமைப்பின் பின்னால் நின்று தமது பதவியைக் காப்பாற்ற முற்படுகின்றார். இதற்காக ஜனநாயக அமைப்பை பொம்மலாட்டம் ஆட்டுவிக்க முற்படுகின்றார். அதாவது, சிறிலங்கா ஜனநாயகப் பாரம்பரியம் பற்றி அடிக்கடி பெருமை பேசும் ஜே. ஆர். ஜெயவர்தனா ஆரம்பித்து வைத்த இவ் ஜனநாயக அமைப்பின் பொம்மலாட்டம் இன்று டி. பி யின் கீழ் குதி போடுகின்றது.

(கொழும்பு)

கைது செய்யப்பட்ட இளைஞர் ஒருவரின் பல்லை குறட்டால் பிடுங்கி எடுத்தாராம் பொலிஸ் அதிகாரி ஒருவர், இந்தக் கோரச்சம்பவம் அண்மையில் சிறிலங்காவின் தென்பகுதி பொலிஸ் நிலையம் ஒன்றில் நடைபெற்றுள்ளது.

இச்சம்பவம் குறித்து வாசுதேவ நாணயக்கார பாராளுமன்றத்தில்கடும் ஆட்சேபனை தெரிவித்த போது இதற்குப் பதிலளித்த ராஜாங்க அமைச்சர் அஸ்வர் இச்சம்பவம் தவறுதலாக நடைபெற்றிருக்கலாம் எனக் கூறி அதனை மழுப்ப முற்பட்டபோது வாசுதேவ நாணயக்கார ''மேற்படி சம்பவத்தில் தொடர்புபட்ட பொலிஸ் அதிகாரி தான் ஒரு பல் மருத்துவராக வரமுடியாததன் குறைபாட்டை தீர்த்துக் கொண்டார்'' என்றார்.

நீதிமன்றபதிவாளர் இருவர் கடமையில் இடைநிறுத்தம்

(கொழும்பு)

கொழும்பு மேல் நீதிமன்ற அலுவலக பணமோசடி தொடர்பாக இரண்டு நீதிமன்ற பதிவாளர்கள் பதவியிலிருந்து இடைநிறுத்தி வைக்கப்பட்டுள்ளனர்

பண மோசடி இடம்பெற்றதாக கூறப்படும் காலத்தில் இந்த அலுவலகத்தில் பணியாற்றி தற்போது கல்கிசை நீதிமன்றத்துக்கு பதிவாளராகவும் கேகாலை நீதிமன்றத்துக்கு பிரதிப் பதிவாளராகவும் இடமாற்றம் செய்யப்பட்டுள்ள பிரஸ்தாப இரண்டுபேரும் இம் மோசடி குறித்து விசாரணை செய்து வரும் சி. ஐ. டி. பொலிசார் தெரிவித்த அறிக்கையை அடுத்து பதவியிலிருந்து இடைநிறுத்தம் செய்யப்பட்டதாக நீதிமன்ற அலுவலக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

சுமார் 2 கோடி ரூபா நீதிமன்ற பணத்தை வங்கியில் வைப்புச் செய்யாமல் மோசடி செய்யப்பட்டதாகவே விசாரணைகள் நடைபெற்றுவருகின்றன என்பது தெரிந்ததே

கிழக்கு மாகாணத்திற்கு பெருமளவு புலிகள் விரைவு

தேர்தலை குழப்பும் நோக்கமாம்

(கொழும்பு)

கிழக்கு மாகாணத்தில் நடைபெறவுள்ள உள்ளூராட்சித் தேர்தலைக்குழப்பும நோக்கில் பெருமளவு விடுதலைப்புலிப் போராளிகள் கிழக்கு மாகாணத்திற்கு நகர்த்தப்பட்டுள்ளதாக சண்டே ரைம்ஸ் பத்திரிகை தெரிவித்துள்ளது. கிளாலி கடலூடாக இவர்கள் சுதந்திரமாக குடாநாட்டிலிருந்து நகர்த்தப்படுவதாகவும் அப்பத்திரிகை தெரிவிக்கின்றது.

இதே சமயம் விடுதலைப் புலிகள் தலைவர் பிரபாகரனும் வன்னிப்பகுதிக்கு வந்துள்ளதாகவும் அப்பத்திரிகை கூறுகிறது.

எழுது வினைஞர் நியமனம் பலர் பதவி ஏற்கவில்லை

(நமது நிருபர்)

எழுது வினைஞர் சேவைக்கும்அதனோடிணைந்தசேவைக்கும் வடக்கு கிழக்கு மாகாணசபை மூலம் யாழ் மாவட்டத்திற்கு வெளியேநியமனம் பெற்றோரில் அனேகர் இன்னமும் தமது பதவியைப் பொறுப்பேற்கவில்லையென யாழ் செயலகத்தில் விடுக்கப்பட்ட பத்திரிகை செய்திக்குறிப்பொன்று தெரிவிக்கின்றது.

மேற்படிபதவியைப்பொறுப்பேற்கும் இறுதி திகதி 31-12-93 என காலக்கெடு கொடுக்கப்பட்டதாகவும் நியமனம் கிடைத்து இதுவரை செல்லாதோர் உடனடியாக அரச அதிபருடன் தொடர்பு கொள்ளும்படியும் கேட்கப்பட்டுள்ளனர்.

மேற்படி நியமனம் பெற்றோர் உடனடியாக தமது பதவியைப் பொறுப்பேற்காவிடில் இவர்களுக்குப்பதிலாக ஏனையோருக்கு இந்நியமனங்கள் வழங்கப்படுமென வடக்கு- கிழக்கு மாகாண உள்துறை அமைச்சு அறிவித்துள்ளது. (சி)

கிரிக்கட் போட்டிகள்

தென்மராட்சி கல்விக் கோட்டத்தினால் 12-02-94 அன்று 15 வயதின் கீழ்ப் பிரிவில் 15ஓவர்களைக் கொண்ட 1-வது ஆட்ட மென்பந்து கிரிககட் அணியில் யா| நாவற்குழி மகாவித்தியாலயத்தை 78 ஓட்டத்தால் மிருசுவில் அ. த. க பாடசாலை வெற்றியீட்டியுள்ளது.

இரண்டாவது ஆட்டத்தில் யா|மட்டுவில் சந்திரபுர மகா வித்தியாலயத்துடன் 2 ஓட்டத்தினாலும், 9 விக்கெறறுக்களினாலும் யா|கைதடி முத்துக்குமாரசாமி மகா வித்தியாலயம் வெற்றியீட்டியுள்ளது.

இந்நிகழ்ச்சிக்குத் தென்மராட்சி உதவிக் கல்விப் பணிப்பாளர் (இணைப் பாடவிதான செயற்பாடு) திரு. கணேசன் அவர்கள் தலைமை வகித்தார். (86)

வருடாந்த உற்சவம்

கொழும்புத் துறை ஆத்திப்புலம் அருள்மிகு ஸ்ரீ சந்திரசேகர விநாயகர் ஆலய வருடாந்த உற்சவம் நேற்று நண்பகல் 11.00 மணிக்குக் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி விசேட அபிஷேகம், பூசை, ஆராதனை வழிபாட்டுடன் நடைபெற்று வருகிறது.

எதிர் வரும் 23ஆம் திகதி சப்பறமும், 24ஆம் திகதி தேர் உற்சவமும், 25ஆம் திகதி மாசி மகம், பூரணை தினத்தன்று தீர்த்தத்திருவிழாவும் இடம் பெறவுள்ளதாக ஆலய பரிபாலன சபைத் தலைவர் திரு. தம்பு தியாகராசா தெரிவித்துள்ளார்.

தமிழ்மொழியை பயன்படுதத அறிவுறுத்தல்

யாழ்ப்பாண நகர உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்கு உட்பட்ட வர்த்தகர்கள் அனைவரும் தத்தம் வர்த்தகநிலையங்களில் பாவிக்கும் வியாபார விளம்பர பலகைகள் அனைத்திலும் தனித் தமிழைப் பயன்படுத்த வேண்டுமெனவு அறிவுறுத்தப்பட்டுள்ளது அத்துடன் ஆங்கில வார்த்தைகளை நேரடியாக தமிழில்எழுதுவதைதவிர்க்கும்படி வேண்டுகோள் விடப்பட்டுள்ளது இவற்றை குறுகியகாலத்தில நடைமுறைப்படுத்தவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது. இது சம்பந்தமாக மேலதிக விபரங்கள் தேவைப்படுவோர் வர்த்தக சங்கப் பணிமனையுடன் தொடர்பு கொள்ளுமாறு வர்த்தகர் சங்கம் அறிவித்துள்ளது

பெரேரா செய்த சிபாரிசையடுத்தே அரசாங்கம் சிற்றா

நீக்கும் நோக்கமாகவே இந்நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.''

சர்வதேசக் கடத்தல் நால்வர் கைதாகினர்

(கொழும்பு)

சர்வதேச கள்ளக் கடத்தல் நடவடிக்கையில் ஈடுபட்டார்கள் எனக் குற்றம் சாட்டப்பட்டு இந்துக் குருக்கள் உட்பட நால்வர் சிறிலங்கா பொலிசாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

சிறிலங்கா அரச உயர் அதிகாரிகள், பொலிஸ்தலைமைப் பீடம் உட்பட பலருடன் இக் கடத்தல் நடவடிக்கை சம்பந்தப்பட்டுள்ளது என இவர்களை கைது செய்த மட்டக்குளிய பொலிசார் கூறினர்.

இவர்களின் மறைவிடங்கள் பல பொலிசாரினால் கண்டுபிடிக்கப் பட்டதாகவும் கூறப்படுகிறது.

பேராதனை பல்கலைக்கழகத்தில்

துன்புறுத்தல் தொடர்பாக மாணவர் இடைநிறுத்தம்

(கொழும்பு)

பேராதனைப் பல்கலைக் கழகத்தைசேர்ந்த சிரேஷ்ட மாணவர்கள் 24 பேர் பல்கலைக்கழகத்தின் இருந்து இடைநிறுத்தப்பட்டுள்ளனர்.

புதிய மாணவர்களுக்கு 'ராகிங்' செய்தது தொடர்பாக இம்மாணவர்கள் இடைநிறுத்தப்படுவதாகவும் இவர்களின் விசாரணை முடியும் வரை இவர்கள் பல்கலைக்கழக வளவுக்கு உள்ளே வரக்கூடாது என்ற கண்டிப்பான உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக இம் மாணவர்களுக்கும், மாணவ சங்கத் தலைவருக்கும், பெற்றோருக்கும் கடிதம் அனுப்பப்பட்டுள்ளதாகவும், இது போன்ற 'ராகிங்' சம்பவங்கள் தொடருமானால் இன்னும் பல மாணவர்களுக்கு இதே கதிதான் ஏற்படும் என விளம்பரப் பலகையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மூன்றுவார பெண்சிசுவின் விரலை வெட்டிய தாதி

(மாஞ்செஸ்டர்)

சுவாசிப்பதற்கு சிரமப்பட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட மூன்றுவார பெண் சிசுவின் விரலில் சிறு துண்டு தாதி ஒருவரால் வெட்டப்பட்டு குப்பைக் கூடையில் வீசப்பட்டது.

வட இங்கிலாந்திலுள்ள மாஞ்செஸ்டர் சிறுவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டிருந்த இச் சிசுவிற்கு விரல் நுனியில் ஊசி ஏற்றப்பட்டுத் துணியால் சுற்றிக் கட்டப்பட்டிருந்தது. இத் துணியை வெட்டும் போது விரலின் சிறுபகுதியும் வெட்டப்பட்டு விட்டது.

வெட்டப்பட்ட அத்துண்டைத் தாதி குப்பைக் கூடையினுள் எறிந்துள்ளார்என வைத்தியசாலை அதிகாரிகள் இதுபற்றித் தெரிவித்தனர். அக்குழந்தையின் கைவிரலிலிருந்து இரத்தம் வடிந்தோடுவதை மற்றுமொரு தாதி கண்டார். அதன்பின்னர் குப்பைக்கூடையினுள் இருந்த அத்துண்டை எடுத்து மீண்டும் அக் குழந்தையின் கை விரலில் வைத்துத் தைத்தனர்.

இச் சம்பவம் தொடர்பான விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் இச் சம்பவத்திற்கெதிராக பிரஸ்தாப குழந்தையின் பெற்றோர்கள் சட்ட நடவடிக்கை எடுக்கக்கூடும் எனவும் வைத்தியசாலை அதிகாரிகள் மேலும் தெரிவித்துள்ளனர்.

கொல்லப்பட்ட உமாபிரகாஷ் அரசின் கைக்கூலியாக செயற்பட்டவர்

அண்மையில் கொழும்பில் கொலையுண்ட புளொட் குழுவைச் சேர்ந்த உமா பிரகாஷ் கொழும்பில் பல தமிழ் இளைஞர்கள் கடத்தப்படுவதற்கும், சித்திரவதை செய்யப்படுவதற்கும் காரணமாக இருந்தார் என்று ஐலண்ட் வார இதழின் கட்டுரையொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது. கடந்த ஆண்டின் மத்தியில் சென்னையிலிருந்து கொழும்பு வந்த உமாபிரகாஷ் புளொட்டின் தலைவராகக் கூறப்படும் சித்தார்த்தனுக்கு எதிராக செயற்பட்டு வந்ததாகவும் ஐ.தே.கவின் முக்கியஸ்தர்கள் சிலரோடு நெருங்கிய நல்லுறவு கொண்டிருந்ததாகவும் கூறப்படுகின்றது. ஐ.தே.க தலைவர்களிடம் புலிகளுக்கு எதிராகப் போரிடக் கூடிய 600 பேர் தம்வசம் இருப்பதாகவும், தனக்கு வீடு, வாகனம், ஆயுதம், தொலைபேசி, நிதி என்பன தரப்பட்டால் தன்னால் அரசுக்கு உதவ முடியும் எனவும் கூறியிருக்கின்றார்.

அரசின் உதவியுடன் இவர் ஒரு தனிக் குழுவாக செயற்பட்டபோது ஈ.பி ஆர்.எல்.எப் குழுவைச் சேர்ந்த இருவர் இவரது குழுவினரால் கொல்லப்பட்டதாகவும், மாலைதீவு தூதுவரகத்தைச் சேர்ந்த மாலைதீவுப் பிரஜைகள் இருவர் இவர்களால் மோசமாக சித்திரவதை செய்யப்பட்டதாகவும் அக் கட்டுரையில் மேலும் கூறப்பட்டுள்ளது.

மேலும் புளொட் குழுவைச் சேர்ந்த அலவாங்கு தாசன் என்பவரது குழுவினராலேயே உமாபிரகாஷ் வனவாசல பகுதியிலுள்ள அவரது இருப்பிடத்திற்கு அருகில் வைத்துக் கொல்லப்பட்டிருக்கலாம் என நம்பப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அரச பத்திரிகையாளர் கொழும்பில் கடத்தல்

(கொழும்பு)

அரச சார்பு பத்திரிகை நிறுவனமான லேக்ஹவுஸ் நிறுவனப் பத்திரிகையாளர் ஒருவர் கொழும்பில் இனந்தெரியாதவர்களால் கடத்திச் செல்லப்பட்டுள்ளார்.

தேவராசா செந்தில்வேலவர் (26) என்ற இப் பத்திரிகையாளர் தினகரனில் கடமையாற்றி வந்தவர் எனவும் கடந்த முதலாம் திகதி கடத்தப்பட்ட இவர் பற்றிய விபரம் எதுவும் இதுவரை தெரியவரவில்லை எனவும் கூறப்படுகிறது.

சம்பவதினம் காலை ஆறு மணிக்கு இவர் தனது பம்பலப்பிட்டி வீட்டிலிருந்து கடைக்கு சென்றார். காலை ஒன்பது மணியாகியும் இவர் வீடுதிரும்பவில்லை. அதேசமயம் அவரது வீட்டுக்கு சென்ற இராணுவத்தினரும் பொலிசாரும் வீட்டை தீவிரமாக சோதனையிட்டனர். இரண்டரை மணித்தியாலமாக வீடு படையினரின் சோதனைக்கு உள்ளானது. இவர் யாரால் கடத்தப்பட்டார் என்பது குறித்த விபரங்கள் ஏதும் தெரியவரவில்லை.

தபால்களை ஏற்றுகொள்ள கப்பல் கப்டன் மறுப்பு

(வடமராட்சி)

யாழ். தபால் திணைக்களத்தினால் கப்பலுக்கு பாரப்படுத்துவதற்காக பருத்தித்துறை துறைமுகத்திற்கு எடுத்துவரப்பட்ட வெளியூர்த் தபாற் பொதிகளை கப்பல் கப்டன் ஏற்க மறுத்ததால் தபாற் பொதிகள் பருத்தித்துறை தபாலகத்தில் வைக்கப்பட்டுள்ளன.

யாழ். தபால் திணைக்கள அதிகாரிகளால் எடுத்துவரப்பட்ட 47 தபாற்பொதிகளைப் பாரமளிப்பதற்காக பிரதம தபால் அதிபர் திரு. கோடீஸ்வரன் முதலில் வாதுவ கப்பலுடன் தொடர்பு கொண்ட போது தபாற் பொதிகளை பாரமேற்க தனக்கு இதுவரை அனுமதி கிடைக்கவில்லையென்று கப்டன் பதிலளித்திருந்தார்.

அதனையடுத்து 'மாகோ' கப்பல் கப்டனுடன் தொடர்பு கொண்ட போதிலும் அதே பதிலே கிடைத்தது. தபாலதிபர் செய்வதறியாத நிலையில் தபாற் பொதிகளை பருத்தித்துறை தபாலகத்தில் வைத்துள்ளார்.

முன்னரெல்லாம் கப்பல் புறப்படுவதற்கு முதல் நாளே தபாற் பொதிகளை கப்பல் கப்டன் பாரமேற்றிருந்தது தெரிந்ததே. அதேவேளை மாகோ, வாதுவ கப்பல்களிலிருந்து இன்றுடன் பொருள்கள் இறக்கும் வேலைகள் முடிவடையும். (யோ)

விமானக் குண்டு வீச்சு

(யாழ்ப்பாணம்)

கட்டுவன் பகுதியில் விமானக்குண்டு வீச்சுத் தாக்குதல் நடாத்தப்பட்டது இக் குண்டு வீச்சுத் தாக்குதலில் இரு பொம்மர் விமானங்களும் உலங்குவானூர்தி ஒன்றும் ஈடுபட்டன-

நேற்றுக் காலை இடம் பெற்ற இந்த விமானக்குண்டு வீச்சுத் தாக்குதலில் ஏற்பட்ட சேத விபரங்கள் அறியப்படவில்லை-

பிரசாரம்

தேர்தல் பிரசாரம் செய்ய ரெலோ குழுவினர் அழைத்ததாகவும் அதற்கு அவர் மறுப்பு

எங்கள் புதிய தமிழ் தலைமுறையின் சிந்தனையில் உதித்த அறிவியற்கழகம்

-கரிகாலன்

இன்று இங்கு திறந்து வைக்கப்பட்டுள்ள அறிவியற் கழகம் எமது தமிழீழ போராட்ட வரலாற்றில் போராட்ட வளர்ச்சியில் ஏற்பட்ட அனுபவத்தைக் கொண்டு எங்கள் தமிழ்ப் புதிய தலைமுறையின் சிந்தனையில் உதித்ததே ஆகும். போராட்டம் ஒன்று நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற வேளையிலே, இந்தப் போரின் முடிவு எங்கள் தமிழீழத்தை நிர்மாணிக்கின்ற நிலையிலே அந்த தமிழீழத்திலே வாழ்கின்ற மக்கள், எப்படிப்பட்டவர்களாக வாழவேண்டுமென்ற ஒரு தீர்க்க தரிசனமான சிந்தனையோடுதான் இந்த அறிவியற் கழகம் இன்று ஆரம்பிக்கப் படுகின்றது. இவ்வாறு இணுவிலில் தமிழீழ விடுதலைப் புலிகள் மாணவரமைப்பினரால் உருவாக்கப்பட்ட அறிவியற் கழகத்தை திறந்து வைத்து உரையாற்றிய தமிழீழ துணை அரசியற் பொறுப்பாளர் திரு. கரிகாலன் கூறினார்.

விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பினரால், மாணவர்களிடையே அறிவியற் சிந்தனைகளை தூண்டும் முகமாக அமைக்கப்பட்ட அறிவியற் கழகத்தின் திறப்பு விழா நேற்று மாலை 3.00 மணியளவில் இணுவிலில் நடைபெற்றது யாழ். மாவட்ட மாணவரமைப்பு பொறுப்பாளர் இதயன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், தமிழீழ துணை அரசியற் பொறுப்பாளர் திரு கரிகாலன் அறிவியற் கழகத்தை திறந்து வைத்தார்.

பாண்ட் வாத்திய இசையுடன், திறப்பு விழாவுக்கு சிறப்பு விருந்தினர்கள் அழைத்து வரப்பட்டனர். மங்கள விளக்கினை மாணவரமைப்பு பொறுப்பாளர் இன்பன் ஏற்றி வைக்க, தேசியக் கொடியை கல்விக் கழக அமைப்பாளர் திரு. இளங்குமரன் ஏற்றி வைத்தார், மாவீரர்களுக்கான மலரஞ்சலியை, யாழ். பல்கலைக் கழக விஞ்ஞான பீடத்தலை

டும் என்பதே எங்கள் தலைவருடைய அவா. இன்று நடைபெறுகின்ற இந்தப் போர் ஒரு அறிவியல் பூர்வமான போராட்டமாக மாறவேண்டும் என்பதும் ஒரு பக்கம் இருக்கிறது. இன்று எம் மக்களுக்குத் தேவைகள் அதிகம் இருக்கிறது ; பொருளாதாரத் தடை அந்தத் தேவையின் முக்கியத்துவத்தை உணரச் செய்திருக்கிறது. இன்று சாதாரண ஒரு தொழிலாளி கூட, தன் அறிவியல்ஆற்றலை வளர்த்துக் கொள்ள வேண்டிய கட்டாயத் தேவை இருக்கிறது. சாதாரண விவசாயி கூட புதிய கண்டுபிடிப்புகளை உருவாக்குகிறான் அந்த கண்டுபிடிப்புகள் அறிவியல் பூர்வமாக மாணவர் மத்தியிலிருந்து எழ வேண்டும், எமது வாழ்க்கைக்கு பயன்படக்கூடிய புதிய உருவாக்கங்கள் உருவாக வேண்டும். எங்களுடைய நாடு உலக நாடுகளும் போற்றக் கூடிய ஒரு புதிய நாடாக திகழ வைக்கவேண்டும் என்பது தான் தலைவருடைய அவா என்றார்.

இத்திறப்பு விழாவில் சிறப்புரையாற்றிய யாழ். பல்கலைக்கழக விஞ்ஞான பீடாதிபதி பேராசிரியர் மகேஸ்வரன் தனது உரையில்,

இன்று மாணவர்கள் பாடசாலைக் கல்வியை புறக்கணிக்கிறார்கள். பரீட்சை நோக்கில் இயங்கும் தனியார் கல்வி நிலையங்களையே நம்புகிறார்கள். இது போட்டிப் பரீட்சைக்கு வேண்டுமானால் பலன் தரலாம். ஆனால் வாழ்க்கைக்கு, கல்வியோடு ஒழுக்கத்தையும் கற்றுத்தரும் பாடசாலைகளே முக்கியமானவை என்றார்

யாழ். வடக்கு வலய கல்விப் பணிப்பாளர் திரு. கந்தசாமி தனது உரையில், வாழ்க்கைக்காகத்தான் நாங்கள் கற்க வேண்டும். இதில் ஒழுக்கம் மிகவும் முக்கியமானது. மாணவர்களிடம் செயன்முறைப் பயிற்சிகளை முழுமையாக புகட்ட வேண்டும் என்றார்.

பகுதி போன்ற பல அமைப்புகளையும் தன்னகத்தே கொண்டுள்ளது குறிப்பிடத் தக்கது. (09) (11)

கிணற்றில் மூழ்கி மரணம்

நீர்வேலியில் கிணற்றில்மீன் பிடிக்கச் சென்ற சிறுவன் ஒருவன் அக்கிணற்றில் மூழ்கி மரணமானான். நீர்வேலி தெற்கைச் சேர்ந்த செல்வரட்ணம் ஆதவன் (வயது 10) என்னும் சிறுவனே இவ்வாறு பரிதாப மரணத்தைத் தழுவிக் கொண்டவராவார்.

மரண அறிவித்தல்கள்

சவரிப்பிள்ளை மரியாம்பிள்ளை

(உடையார்)

சில்லாலையைச் சேர்ந்த சவரிப்பிள்ளை மரியாம்பிள்ளை (உடையார்) 16-2-94 மாலை காலமானார். இவர் மரியம்மாவின் அன்புக் கணவரும், எட்வின் யோசவ் (கல்வித் திணைக்களம், யாழ்ப்பாணம்), டெனிசியஸ் (தபாலதிபர், சங்கானை), காலஞ்சென்ற வில்லியம் ஜெயராஜா (நீர்ப்பாசனத் திணைக்களம், வவுனிக்குளம்), றஞ்சிதம் (லண்டன்), புஸ்பம் (லண்டன்), புனிதம் (லண்டன்), அருட்திரு. ரூபன் மரியாம்பிள்ளை (பங்குத்தந்தை, அரியாலை), இன்பம் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும், மலர், ஜெயமணி (ஆசிரியை பெரிய விளான்), பற்றிமா (அல்லைப்பிட்டி), யேசுதாசன், ஜெயராஜா, யோகதேவா ஆகியோரின் அன்பு மாமனாரும், திவ்வியராஜ் கொலின், மொறின், அரவிந், ஆர்த்தி, ஜெயசங்கீதா, றோகான், டயான், யேசன், யோஆன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிச் சடங்குகள் இன்று 17.2.94 மாலை 3 மணிக்கு யாழ். புனித யுவானியார் ஆலயத்தில் திருப்பலியுடன் ஆரம்பமாகி நல்லடக்கத்திற்காக சில்லாலை சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:

41/1, கோவில் வீதி,
யாழ்ப்பாணம்.

ம. எட்வின் யோசவ்
(மகன்)

(7549)

வன்னியர் கிட்ணர்

கீரிமலையைப் பிறப்பிடமாகக் கொண்ட வன்னியர் கிட்ணர் 16-2-94 அன்று புதன்கிழமை காலமாகிவிட்டார். இவர் கதிரவேலு (பேபி) (சீமெந்துக் கூட்டுத்தாபனம், கே. கே. எஸ்.), பாப்பா, இராசு, சோதி, (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும், சந்திரா, தவலிங்கம், அருள்லிங்கம், பட்டு, (கனடா) ஆகியோரின் மாமனாரும் ஆவார், அன்னாரின் இறுதிச் சடங்குகள் புன்னாலைக்கட்டுவனிலுள்ள கதிரவேலு இல்லத்தில் 17-2-94 வியாழன், இன்று நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:

புன்னாலைக்கட்டுவன்,

கதிரவேலு (பேபி)

உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்

16.02.1994

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம் 834

வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள்:

26-8419, 28-1636, 41-9855, 26-7252, 26-5351
26-2786, 22-5857, 27-7542, 24-8197, 24-6811
27-6493, 27-7537, 27-2084, 27-8754, 26-0507
24-5015, 26-9158, 41-8686, 27-0991, 24-5119
27-5775, 26-0512, 26-0547, 26-7299.

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்:

27-5099, 40-4760, 42-6452, 26-6382, 26-4139
24-4207, 22-8075, 41-9663, 24-5069, 24-6431
41-9355, 22-2250, 28-0429, 42-1494, 28-3439
26-2979, 27-5187, 24-1983, 27-9771, 26-9145
22-6897, 24-6639, 27-0493, 27-5186, 24-4854
24-9830, 26-1461, 24-4465.

ஆண் அச்சுக்கோப்பாளர் தேவை

அச்சக நிறுவனம் ஒன்றிற்கு அனுபவம் வாய்ந்த ஆண் அச்சுக்கோப்பாளர் தேவை.

விள. இல. மே | பா 313
ஈழநாதம்
யாழ்ப்பாணம்.

(7546)

அனுபவமுள்ளவர்கள் தேவை

பெண்களுக்குரிய ஆடைகள் வெட்டுவதில், பூப் போடுவதில் அனுபவமும், திறமையும் உள்ளவர்களிடமிருந்தும், ஆண்பிள்ளைகளுக்குரிய சேட், காற்சட்டைகள் தைப்பதிலும், பிறா வெட்டுவதிலும், தைப்பதிலும் திறமையும், அனுபவமும் உள்ளவர்களிடமிருந்தும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பிக்க வேண்டிய முகவரி:

"சிற்றி காமென்ஸ்"
பலாலி வீதி,
திருநெல்வேலி சந்தி,

விண்ணப்ப முடிவுத் திகதி: 25 - 2 - 1994

(7548)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி 81-ஆம் இலக்கத்திலுள்ள "ஈழநாதம்" பணிமனையில் 1994 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 17 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

புத் தெரிவித்ததையடுத்து இரவு 11 மணியளவில் இவர் சுட்டுக் கொல்லப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

காமினியுடன்

வித்துள்ளார்.

இதேவேளை இவருடன் காமினிதிசாநாயககாவும்இந்தியா செல்ல இருப்பதாகவும் இதனால் இவ் விஜயம் குறித்து ஐக்கிய தேசியக் கட்சியினரிடையே பெரும் சர்ச்சை ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

நீண்டகாலமாக ஐக்கிய தேசியக் கட்சியில் உறுப்பினர்களாகவுள்ளவர்களுக்கு வேண்டிய மரியாதை இந்நடவடிக்கை மூலம் மீறப்பட்டுள்ளது எனவும் கட்சியிலிருந்து வெளியேறி கட்சிக்கு எதிராக செயலாற்றி வந்த ஒருவரை மீண்டும் கட்சியில் சேர்த்துக்கொள்வதுடன் பெரும் பதவிகளும் வழங்குவது தமக்கு அதிருப்தியை உண்டாக்கியுள்ளதாக ஐ. தே. கட்சி வட்டாரங்கள் கூறுகின்றன.

சுகாதார

அப்பயிற்சியை பின்பற்ற முடியாது கைவிட்டு விட்டதாகவும் தெரியவருகின்றது இதேவேளை பயிற்சியை பெற்று வரும் மற்ற மூவருக்கும் இன்னும் ஒன்றரை வருட பயிற்சி இருப்பதாகவும் ஆதலால் அவர்கள்பயிற்சிபெற்று வந்தாலும் மீள் நியமனம் பெற்றுபணிபுரிபவர்களைவிட ஏனைய 13 பேருடன் சேர்ந்து 16பேரே அப்போதும் இருப்பார்கள் என்பது குறிப்பிடத்தக்கது 61 பேர் தேவையான இடத்தில் தற்போது 13 பேர் மட்டும் இருப்பதால் குடாநாட்டில் சுகாதார வைத்திய அதிகாரிகள் பிரிவில் பெரும் நெருக்கடி நிலை தோன்றியுள்ளதாக தெரியவருகின்றது.

இதேவேளை 10,000 மக்களுக்கு ஒரு சுகாதார பரிசோதகர் என்பதே அமுலில் உள்ளதாகவும், இது எப்போதோ தென்பகுதியில் நடைமுறைப்படுத்தப் பட்டுவிட்டதாகவும் இங்கோ குடாநாடு பூராவும் 19 பேரே பணிபுரியும் நிலையில் உள்ளதாகவும் தொடர்புடையவட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

கழக விஞ்ஞான பீடத்தலைவர் பேராசிரியர் கி. மகேஸ்வரன், தொழினுட்பக் கல்லூரி அதிபர் திரு. ப. ஜெயரட்ணம் ஆகியோர் செலுத்தியதைத் தொடர்ந்து ஒரு நிமிட மௌனஞ்சலியும் இடம்பெற்றது. தொடர்ந்து அறிவியற் கழகத்தை தமிழீழ துணை அரசியற் பொறுப்பாளர் திரு. கரிகாலன் திறந்து வைத்தார்.

அவர் மேலும் உரைநிகழ்த்துகையில், எங்களுடைய மாணவர்கள், பரீட்சைக்கு தங்களைத் தயார்படுத்தும் ஓர் இயந்திர மனிதனாக இல்லாது. இந்த நாட்டுக்குப் பயன்படுகின்ற ஆற்றலுள்ள மனிதனாக இருக்க வேண்

மணற்காட்டில்

மீனவர் மீது தொடுத்தனர்.

அதன்போது பலாலியிலிருந்து இடம்பெயர்ந்து முனையில் தங்கியிருந்தமூன்று பிள்ளைகளின் தந்தையான தியோகுப்பிள்ளை ஞானரட்ணம் (வயது 45) என்பவரே காணவில்லைஇவருக்கு என்ன நடந்தது என்பது பற்றியும் தெரியவில்லை எனினும் இவரை மீட்கும் முயற்சி நடைபெற்றது.

இவருடன் சென்றவர்களான மோ. பிரான்சீஸ் பி. றொபேர்ட், அ. ரூபன், இ. தேவராசா, அ. சதீஸ், புஸ்பராசா ஆகியோர் கடலில் குதித்து மயிரிழையில் தப்பிக்கொண்டவராவர். இவர்களின் இரண்டு படகுகள் துவாரம் துளைக்கப்பட்ட நிலையில் சேதமடைந்தது.

கரையில் மீன் பிடித்துக் கொண்டிருந்தபோது எம்மை நோக்கி வெளிச்சம் போட்ட நிலையில் கடற்படையினர் நெருங்கினர் அவர்கள்நெருங்கும் போது பீரங்கி, துப்பாக்கித் தாக்குதலை மேற்கொண்டிருந்தனர்: அச்சத்தினால் நாங்கள் எல்லோரும் கடலில் குதித்தோம். தியோகுப்பிள்ளை ஞானரட்ணத்தைத் தவிர மற்றவர்கள் கரைக்கு வந்து சேர்ந்து விட்டோம். காணாமல் போனவர் நீந்தத்தெரியாதவர் இவருக்கு என்னநடந்திருக்கலாமென்று சொல்ல முடியவில்லையென எமது வடமராட்சி செய்தியாளருக்கு தப்பி வந்தவரில் ஒருவரான பி. றொர்பேர்ட் தெரிவித்தார். (யோ)

றார்.

இத்திறப்புவிழாவில், பிரதிக்கல்விப் பணிப்பாளர் திரு. சிவானந்தன், தொழில்நுட்பக்கல்லூரி அதிபர் திரு. ஜெயரட்ணம் ஆகியோரும் உரை நிகழ்த்தினர்.

இவ்வறிவியற் கழகமானது பொதுநூல் நிலையம், உயிரியல், பௌதிக, இரசாயன ஆய்வுகூடங்கள், கணனிப்

கர பந்தாட்டம்

கரவெட்டி இராஜ கிராமத்தில் நடைபெறும் கிராமிய பாசறை நிகழ்வில் இன்று விளையாட்டு நிகழ்வாக செற்றப் முறையிலான கர பந்தாட்டப் போட்டி நடைபெறவுள்ளது- காங்கேசன்துறை ஐக்கிய விளையாட்டுக்கழகம், ஆவரங்கால் மத்திய விளையாட்டுக்கழகம் ஆகியன இச் சிநேகபூர்வ கண்காட்சிப் போட்டியில் கலந்துகொள்ள இருக்கின்றன

பணிபுரிந்த

என்பவர் கடந்த ஆறுமாத காலமாக பணியாற்றி வந்தார்.

இவர் நேற்று முன் தினம் காலை 9மணிக்கு மதிய உணவையும் பார்சலாககட்டிஎடுத்துக்கொண்டு துவிச்சக்கர வண்டியில் வேலைக்கு வந்ததாகவும் இவரது சகோதரன் மரணவிசாரணையின் போது தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் மாலை 5-30 மணியளவில் தங்கை இறந்துவிட்டதாக தனக்கு தகவல் கிடைத்ததாகவும் தனக்கு இந்த மரணத்தில் சந்தேகம் இருப்பதாகவும் மரண விசாரணை அதிகாரிக்கு தெரிவித்தார். அதை அடுத்து தீர்ப்பு ஒத்திவைக்கப்பட்டு உடல் ஒப்படைக்கப்பட்டது.

இதேவேளை சம்பவத்தினத்தன்று மாலை டிஸ்பென்சறிக்கு சென்றவர்கள் டிஸ்பென்சறி முன்கதவு பூட்டியிருப்பதை கண்டு அருகில் உள்ள வீட்டுக்காரரிடம் விசாரித்ததாகவும் அவர்கள் டிஸ்பென்சறியின் ஜன்னலூடாக பார்த்தபோது இறந்தவர் படுக்கையில் கிடந்ததாகவும் தட்டிப்பார்த்தபோதுஅவர் இறந்திருந்தமை தெரிந்தது எனவும் விசாரணையின்போது தெரிவிக்கப்பட்டது. (கி)

புன்னாலைக்கட்டுவன், கதிரவேலு (பேபி)
தெற்குச்சந்தி,
சுன்னாகம்.

(சி-8651)

திருமதி சொர்ணம் செல்லையா

அராலி வடக்கைச் சேர்ந்த திருமதி சொர்ணம் செல்லையா 15-2-94இல்சிவபதம் அடைந்தார். இவர் முன்னாள் யாழ்ப்பாணக் கல்லூரி நூலகர் காலஞ்சென்ற செல்லையாவின் அன்பு மனைவியும் யோகலட்சுமி, காலம் சென்ற இராஜலட்சுமி, இராஜேஸ்வரி (அமெரிக்கா) காலஞ்சென்ற சரவணபவான், இராஜமலர் (லண்டன்), டாக்டர் சூரியகுமார் (FRCS, லண்டன்) ஆகியோரின் பாசத் தாயாரும் ஜெகதீசன், காலம் சென்ற இராஜரட்ணம், டாக்டர் வைரவப்பிள்ளை (அமெரிக்கா), வசந்தா (கனடா), நேமிநாதன்(லண்டன்), உமையாள்(லண்டன்)ஆகியோரின் மாமியாரும் ஜெயந்தினி (கனடா), டாக்டர் சாந்தினி லோகேஸ்வரன் (யாழ். போதனா வைத்தியசாலை), சுதர்சன், ரமணி, காலஞ்சென்ற விக்கினேசன், நஞ்சித் செல்வேந்திரன்(கனடா), டுளி தர்மேந்திரன் (கனடா,) அபர்ணா (கனடா), சுமங்கலா, பிரசன்னா (லண்டன்) ஆகியோரின் பேர்த்தியுமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் (16-2-94) அராலி மயானத்தில் நடைபெற்றது. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்

''இலட்சுமிவில்லா''
அராலி வடக்கு,
வட்டுக்கோட்டை.

S. லோகேஸ்வரன்

(7541)

பூதத்தம்பி கந்தையா

(இளைப்பாறிய வைத்தியர், பண்டாரவளை)

பூதத்தம்பி கந்தையா அவர்கள் 14-2-94 அன்று லியங்காவல பண்டாரவளையில் காலமானார். இவர் நீர்வேலியைப் பிறப்பிடமாக கொண்டவரும், உடுவில் மேற்கைச் சேர்ந்த - நாகபூசணியின் அன்புக் கணவரும், சிவானியின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற பூதத்தம்பி தம்பதிகளின், இரண்டாவது மகனும், காலஞ்சென்ற திரு. மயில்வாகனம், அவர்களினதும் திருமதி க. மயில்வாகனம் அவர்களினதும் மூத்த மருமகனும், நீர்வேலியை சேர்ந்த இளைப்பாறிய அதிபர் பூ. கதிரவேலு அவர்களினதும், திருமதி. கந்தையா, திருமதி குமாரசாமி (கனடா) ஆகியோரின் சகோதரரும் திருமதி நவேந்திரராணி, சிற்சபேசன் திருமதி. நவபுஷ்பம், கதிர்காமநாதன், திரு ம. சிவலிங்கம் (பெரிய கிளார்க்கர், அமிர்தகல) ஆகியோரின் மைத்துனரும் உடுவிலைச் சேர்ந்த திரு. ஆ. சிற்சபேசன் (மக்கள் வங்கி முகாமையாளர் யாழ். பல்கலைக் கழகம்), கோப்பாயைச் சேர்ந்த திரு. பொ. கதிர்காமநாதன் (தொழில்நுட்பக் கல்லூரி விரிவுரையாளர்), அளவெட்டியைச் சேர்ந்த திருமதி சி. ஜெயலக்சுமியின் சகலனும் ஆவார். அன்னாரின் ஈமக்கிரியை 16-2-94 புதன் அன்று பண்டாரவளையில் நடைபெற்றது. இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்

உடுவில் மேற்கு,
சுன்னாகம்.

(7550)

ஆ. சிற்சபேசன்
(முகாமையாளர் மக்கள் வங்கி
யாழ். பல்கலைக்கழகம்)